6th August 1966]

கலெக்டர்கள் அறிக்கையும் விட்டார்கள். ஆனால், இப்போது அங்குள்ள அதிகாரிகள் தானியங்கள் ஜில்லாவுக்குள்ளே கொண்டு போனாலும் பிடிக்கிறார்கள். இதனால் ஜனங்கள் மிகவும் பீதி அடைந்திருக்கிறார்கள். இதற்கு ஏதாவது பரிகாரம் ஏற்படுத்து வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : இது ஆலங்குடியைப்பற்றிய கேள்வி. ஜில்லாவுக்குள் கொண்டுபோகலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், கொள்முதல் நடைபெறுகிற நேரத்தில் சரியாகக் கொள்முதல் நடைபெறுவதற்காக ஜில்லாவுக்குள்ளேயும் தானியங்கள் நடமாட்டத்தை அவ்வப்போது இருக்கின்ற சூழ்நிலை களுக்கு ஏற்ப அதிகாரிகள் தடை செய்வார்கள்.

K.— ஆடூர் கண்ணங்குடிச் சாலை அபிவிருத்தி

*168 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா K- ஆடூர் கிராமத்திற்கும், கண்ணங் குடிக்கும் நடுவில் இருக்கும் ஹைவேஸ் ரோடை சீர் செய்ய வேண்டி அரசாங்கத்திற்கு அண்மையில் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) : A representation from the Chairman, K-Adur Panchayat, for metalling a portion of the Ponneri taluk bund road, which connects K-Adur and Kannankudi, was received in January 1965. It was found not possible to take up the work for want of funds.

Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act.

*169 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any representation from certain members of the Legislative Assembly on 1st February 1966 regarding the jurisdiction of Civil Courts to decide the correctness or otherwise of the classification of lands as Government assessed waste under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) After careful examination of the representation the Government came to the conclusion that it was not necessary to amend the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, in the manner suggested by the M.L.As. The members have been already informed of this decision.

[6th August 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் இந்த மன்றத்தில் வந்தபோது, அதிலுள்ள குறைகளை மாவட்டங்களில் இருக்கின்ற கலெக்டர்கள் கவனித்து, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுப்பார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் இப்போது போடப்பட்டிருக்கும் உத்தரவின்படி லான்ட் ஓனர்களுக்கு மட்டும்தான் பட்டா கொடுக்க முடியும், ரயத்துக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, ரயத்துக்களுக்கும் பட்டா கொடுக்கின்ற அளவில் இந்த உத்தரவை மாற்றுவதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த உத்தரவின் விவரங்கள் இப்போது என்னிடமில்லை. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் விரிவாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

* 170 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representations were received by the Government from the inam ryots of Navalok village, North Arcot district for notifying the village under Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act; and

(*b*) the details of the action taken by the authorities?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The matter is under consideration of the Government.

கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

* 171 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் :
திரு. ஆ. தங்கவேலு : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவு மொத்த உற்பத்தி விற்பனைச் சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்கள்பற்றி அதன் அங்கத்தினர் பலர் கையொப்பமிட்டுப் புகார் ஏதேனும் அண்மையில் அனுப்பியிருக்கிறார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) An enquiry is in progress.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, கடையநல்லூர் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பல முறை புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது இதன்பேரில் விசாரணை நடைபெற்று வருவதாக